# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## வியாழக்கிழமை, 1979 பிப்ரவரி 15

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. அரசினர் தீர்மானம்

### விதி 22ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள்—விடைகள்' என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 22, 15–2–1979 மற்றும் 16–2–1979 ஆகிய தேதிகளில் தளர்த்தப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

### 2. அறிவிப்பு

### ஒத்திவைக்கப்பெறும் வினாக்களை எடுத்துக் கொள்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு 15–2–1979 தேதியிட்டு வழங்கப்பட்டு இருக்கிற வினாக்கள் 17–2–1979 அன்று எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### உறுப்பினர் திரு ரா. உமாநாத் அவர்களின் வீடு தாக்கப்பெற்றது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 42 இன் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள் பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானத்தை திருவாளர்கள் ரா. உமாநாத், பி. ஈஸ்வரமூர்த்தி